Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 267/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosection – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | காளீஸ்வரன் |
| Father Name | : | நாகலிங்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026.

(எதிரி ஆஜர். )

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது எஸ்பி பட்டினம் காவல் நிலையத்தில் 24.07.2022ம் தேதியிலிருந்து சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.08.2022ம் தேதி 14.00 மணிக்கு நான் மற்றும் தலைமைக்காவலர் 2257 நாகரெத்தினம், முதல்நிலை காவலர் 1858 மும்மூர்த்தி, தனிப்பிரிவு முதல்நிலைகாவலர் 393 அருண்குமார் ஆகீயோர்களுடன் பாசிப்பட்டினம் தீர்த்தானதான்டம் ஆகிய பகுதிகளில் பகல்ரோந்து சுற்றி எஸ்பி பட்டினம் கடற்கரைக்கு செல்லும் வழியில் பள்ளிவாசல் தெருவில் சாத்தையா கொள்ளுப்பட்டறை அருகில் வளர்த்தியாக ஒருவர் நின்று கொண்டிருந்தார். அப்போது போலிஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் அந்த நபர் கையில் வைத்திருந்த நீளமான கத்தியை தனது இடுப்பில் மறைத்துவைத்தார்.

அவரிடம் சென்று நாங்கள் விசாரித்தபோது அவரது முகவரியை முன்னுக்குப்பின் முரணாக சொன்னார். தனது பெயரை அப்துல் லாஃபிர் என்றும் வயது 24 என்றும் த/பெ. செய்யது முகம்மது மேலத்தெரு, நம்புதாளை, தொண்டி என்று கூறினார். அப்போது ஜமால்மைதீன் மகன் சகுபர்சாதிக் என்பவர் 07.03.2022ம் தேதி என் மீதும், என் அக்கா கணவர் மீதும், குழந்தைகள் மீதும் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது இதனால் அவர் வெளிநாடு செல்வதற்கு பாஸ்போர்ட் எடுக்க பிரச்சனையாக இருந்து வந்தது, இதனால் அவர் சென்னையிலிருந்து சகுபர்சாதிக் என்பவரை கொல்வதற்காக அவர் வந்துள்ளேன் என்றும், எங்களை கண்டதும் அங்கிருந்து நகரஆரம்பித்தார். நாங்கள் உடனே அவரை பிடிக்க முற்பட்டபோது கையில்வைத்திருந்த கத்தியை ஏன்டா போலிஸ் தாயோலிகளா என்று சொல்லிக்கொண்டு, கத்தியால் உங்களை குத்தி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். அப்போது நாங்கள் அவரை பிடித்து அவர் கையில் வைத்திருந்த கத்தியை கைப்பற்றி எஸ்பி பட்டினம் காவல் நிலையம் வந்து காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். இது சம்மந்தமாக நான் ஒரு எழுத்து மூலமான புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

இவ்வழக்கு சம்மந்தமாக புகாரை நானே கைப்பட எழுதிக்கொடுத்தேன். புகார் எழுதிக்கொடுககும்போது நேரம் என்ன இருக்கும் என்றால் மணி 14.50 இருக்கும். நாங்கள் ரோந்து பணிக்கு சென்றபோது நிலைய அதிகாரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். நான் புகார் கொடுத்தபோது தொண்டி வட்ட காவல் ஆய்வாளர் எங்கள் காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் இல்லை. எங்களுடைய தினசரி பணி சம்மந்தப்பட்ட விவரத்தை பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்போம் என்றால் சரிதான். அதேபோல் அன்றாட பணிகள் குறித்து நாங்கள் எங்களுடைய பாக்கெட் நோட்டில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு செல்லவேண்டும் என்றால் மேலதிகாரியின் உத்தரவின்படிதான் செல்ல முடியும் என்றால் சரிதான். அவ்வாறு ரோந்து பணிக்கு செல்லும்போது யார்யார், எந்த வாகனத்தில், எந்த பகுதிக்கு செல்கிறோம் என்ற விவரத்தை பொதுநாட்குறிப்பேட்டில் குறிப்போம் என்றால் சரிதான். புகார் கொடுத்த அன்று நாங்கள் எந்தெந்த பகுதிக்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்ற விவரத்தை குறித்து

வைத்த பாக்கெட்ரோட்டை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. புகாரில் ரோந்து பணிக்கு இருசக்கரவாகனத்தில் சென்றோமா, நான்கு சக்கர வாகனத்தில் சென்றோமா என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் ரோந்துபணிக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றும், ரோந்து முடிந்து எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு திரும்பினோம் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ரோந்துக்கு கிளம்பிய நேரத்தை சொல்லியுள்ளேன். காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணிக்கு கிளம்பி எந்தெந்த பகுதிகளில் எவ்வளவு நேரம் ரோந்து பணி செய்யப்பட்டது என்ற விவரத்தை புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை பார்த்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் அரைகிமீ துாரம் இருக்கும். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். புகார் 1 மணி நேரம் கழித்துத்தான் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 20.08.2024ம் தேதி 14.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லி புகார் 15.00 மணிக்குத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரியை முதன்முதலாக பார்த்தாக சொல்லப்படும் பகுதி மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளது என்றால் சரிதான். கடைக்கு அருகில் இருந்த நபர்கள் யாரும் எதிரி சட்டவிரோத செயலில் ஈடுபடுகிறார் என்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியை முதன்முதலாக பார்த்த இடத்தின் இருபுறமும் உள்ள கடைகளில் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் இல்லை. அந்த கடைகளில் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றும், உள்ளதை ஒப்புக்கொண்டால் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை பார்த்ததாக சொல்லும் பகுதிக்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களிடமிருந்து புகார் மனு பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் அபாயகரமான ஆயுதம் இருந்து கைப்பற்றப்பட்டப்பட்டால் எதிரியின் கைரேகை மற்றும் ஆயுதத்தில் உள்ள கைரேகையை எடுத்து தடயவியல்துறைக்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அபாயகரமான ஆயுதம் கைப்பற்றப்பட்டால் சீல் வைத்து ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். என்னுடைய புகாரில் எங்களை

அசிங்கமாக பேசி, ஆயுதத்தை வைத்து கொலை மிரட்டல்விடுத்த விவரத்தை தனிப்பட்ட சாட்சிகள் பார்த்தார்கள் என சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போது அவருடைய உறவினர்களுடன் பிரச்சனை இருந்ததாக சொல்லப்பட்ட வழக்கு சம்மந்தமாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகார்மனுவின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் என் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். எதிரியின் பாஸ்போர்ட் மற்றும் எதிரியின் உறவினர்கள் பாஸ்போர்ட் முடக்கி வைக்கப்பட்டுள்ள பாஸ்போர்ட்டின் எண்ணை புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், நேரத்தில் காவல் நிலையத்தில் முன்அனுமதி பெற்று எந்தவித ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் ரோந்து பணிக்கு எந்தெந்த பகுதிக்கு சென்றோம், எவ்வளவு நேரம் ரோந்து பணி செய்தோம் என்ற விவரத்தை சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது மாதிரி, சொன்ன நேரத்தில், தேதியில், இடத்தில் சம்பவம் நடைபெற்றிருந்தால் யாராவது தனிப்பட்ட சாட்சி சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி எங்களை அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என சொல்வதும், எதிரியிடமிருந்து ஆயுதம் கைப்பற்றியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எதிரி மீது புள்ளிவிவரக்கணக்கிற்காக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.